

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.6.2024) அண்ணா அறிவாலயத்தில், மாநிலங்களவைக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திருச்சி சிவா, மாநிலங்களவைக் குழுத் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மு. சண்முகம், மாநிலங்களவை கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ள பி. வில்சன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.06.2024) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நீர்வளத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ திட்டஇயக்குநர் தமிழ்நாடு வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் தென்காசி சு. ஜவகர், நீர்வளத் துறை கூடுதல் செயலாளர் திருமதி சு.மலர்விழி, நீர்வளத்துறை அரசு சிறப்பு செயலாளர் கா.முருகன், நீர்வளத் துறை காவேரி தொழில் நுட்ப குழுமத்தின் தலைவர் ஆர்.சுப்ரமணியன், நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கு.அசோகன் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இந்து சமய அறநிலையத்துறையின் புதிய அறிவிப்புகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 14-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (12.06.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் சட்டமன்ற அறிவிப்புகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்து சமய அறநிலையத் துறையானது தன் ஆளுகைக் குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செவ்வனே மேற்கொண்டு வருவதோடு, சட்டமன்றத்தில் புதிய அறிவிப்புகளையும் வெளியிட்டு உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறது.

அந்த வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு 2021 - 2022, 2022 - 2023 மற்றும் 2023 - 2024 ஆம் நிதியாண்டுகளில் சட்டமன்ற மானியக்கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் நிறைவு பெற்ற பணிகளை தவிர இதர பணிகளின் தற்போதைய பணி முன்னேற்றம் குறித்தும், 2024-2025ஆம் நிதி யாண்டில் அறிவிக்கப்பட வேண்டிய புதிய அறிவிப்புகள் குறித்தும் அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுடன் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசுகையில், கடந்த நிதி யாண்டுகளில் அறிவிக்கப்பட்டு தற்போது நடைபெற்று வரும் பணிகளை கால நிர்ணயம் செய்து துரிதமாக முடித்திட வேண்டுமெனவும், நடப்பாண்டில் அறிவிக்கப்படும் புதிய அறிவிப்புகள் திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கும், பக்தர்களின் நலன் சார்ந்த வகையிலும் வடிவமைத்திட வேண்டுமெனவும் அறிவுரைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ. சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சு.ஜானகி, இணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு பதிவெண் இல்லாத

# ஆம்னி பேருந்துகளுக்கு இன்று முதல் தடை!

## போக்குவரத்துத் துறை அறிவிப்பு!

சென்னை, ஜூன் 14-

தமிழ்நாட்டில் ஓடும் கணிசமான ஆம்னி பேருந்துகள் தமிழக பதிவெண்ணுடன் இருப்பதில்லை. கர்நாடகா, புதுச்சேரி, அஸ்ஸாம் உள்பட வேறு மாநிலங்களில் பதிவு செய்து தமிழ்நாட்டில் ஓடுகிறது. இப்படி வெளிமாநில பதிவெண் கொண்ட 652 ஆம்னி பேருந்துகளால் ஆண்டொன்றுக்கு தமிழக அரசுக்கு ரூ.28.16 கோடி இழப்பு ஏற்படுகிறது. வெளிமாநில பதிவு எண் கொண்ட பேருந்துகளை தமிழகப் பதிவு எண்ணாக மாற்ற வேண்டும் என்று அரசு வலியுறுத்தி வருகிறது.

இதற்கிடையே ஆம்னி பேருந்துகள் சங்கத்தினர் கோரியதை அடுத்து பதிவெண் மாற்றுவதற்கான அவகாசத்தை அரசு நீட்டித்து வந்தது. இந்நிலையில் தமிழ்நாடு பதிவெண் இல்லாத ஆம்னி பேருந்துகளுக்கு இனி அனுமதி இல்லை என அரசு போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- இனி உரிய தமிழக பதிவெண் இல்லாமல், தமிழ்நாட்டின் அனுமதிச் சீட்டு பெறாமல் உள்ள ஆம்னி பேருந்துகள் வரும் ஜூன் 14ம் தேதி முதல் மாநிலத்தில் இயங்க அனுமதி இல்லை

எனவே முறையற்ற வகையில் வெளி மாநிலங்களில் பதிவு செய்து இயங்கும் வெளி மாநில பதிவெண் கொண்ட ஆம்னி பேருந்துகளில் இனி பயணிகள் பயணம் செய்வதை முற்றிலும் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மீறி பயணம் செய்தால் அரசு அதற்கு பொறுப்பேற்காது. மேலும் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு அந்தந்த ஆம்னி பேருந்து உரிமையாளர்களே முழு பொறுப்பு ஏற்க நேரிடும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.


தி.மு.க. இளைஞர் அணி



கலைஞர் செய்திகள்

கலைஞர் 100 1924 - 2023

இணைந்து நடத்தும்

# என் உயிரினும் மேலான..!




## கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

சமூகநீதி, பகுத்தறிவு, சுயமரியாதை, மாநில சுயாட்சி, மொழியுரிமை போன்ற திராவிட இயக்கக் கொள்கைகளில் பற்றும் ஆர்வமும் கொண்டவரா நீங்கள்?

திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதன் மூலம் சமூக மாற்றங்களைச் சாதிக்க முடியும் என்று எண்ணுபவரா நீங்கள்?

பேச்சாற்றல் மூலம் மற்றவர்களைக் கவரக்கூடியவரா நீங்கள்? உங்களுக்காகத்தான் இந்தக் களம்!

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியும் கலைஞர் தொலைக்காட்சியும் இணைந்து நடத்தும் **'என் உயிரினும் மேலான'** பேச்சுப் போட்டி உங்களுக்கான வாசலைத் திறக்கிறது. நீங்கள் செய்யவேண்டியது எல்லாம் ஒன்றே ஒன்றுதான். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அன்பகம், 614, அண்ணாசாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018 என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

மேலும் www.kalaignar100pechu.org என்ற இணையதளத்தில் உள்ள 'விண்ணப்பம்' பகுதியில் உங்கள் விவரங்களைத் தந்து பதிவு செய்துகொள்ள வேண்டும். உங்கள் மாவட்டத்தில் நடைபெறும் முதல்கட்டத் தேர்வில் கலந்துகொள்ள உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். **விண்ணப்பிக்க கடைசி நாள் : 15.07.2024.**

முதல்கட்டத் தேர்வில் கலந்துகொண்டவர்களில் சிறப்பாகப் பேசியவர்களைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு மண்டலம் தோறும் நிகழ்ச்சி நடைபெறும். இந்த இரண்டாம் கட்ட நிகழ்ச்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நடைபெறும் இறுதிக்கட்ட நிகழ்ச்சியில் மிகச்சிறப்பாகப் பேசிய முதல் மூன்று நபர்களுக்குப் பரிசுகள் வழங்கப் படும்.

'என் உயிரினும் மேலான' நிகழ்ச்சி கலைஞர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும்.

**முதல் பரிசு ரூ.1,00,000**
**இரண்டாம் பரிசு ரூ.75,000**
**மூன்றாம் பரிசு ரூ.50,000**

### பேச்சுப்போட்டித் தலைப்புகள்

- என்றென்றும் பெரியார். ஏன்?
- அண்ணா கண்ட மாநில சுயாட்சி
- கலைஞரின் தொலைநோக்குப் பார்வை
- மானமிகு சுயமரியாதைக்காரர் கலைஞர்
- கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி
- இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்
- சமூக நீதிக் காவலர் கலைஞர்
- தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க.
- பேசி வென்ற இயக்கம்
- திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின்

### விதிமுறைகள்

● 18 முதல் 35 வயது வரையுள்ளவர்கள் போட்டியில் கலந்துகொள்ளலாம். ● போட்டி நடைபெறும் நாள், இடம் போன்ற விவரங்கள் முன்பதிவு செய்துகொண்டவர்களுக்குத் தெரிவிக்கப்படும் ● பேச்சுத் திறன் அடிப்படையில் சிறந்த பேச்சாளர்களை, மூன்று நடுவர்கள் தேர்வு செய்வார்கள். ● நீங்கள் பேச வேண்டிய தலைப்பு உங்களுக்குத் தெரிவிக்கப்படும். தலைப்பை மையமாக வைத்தே உங்கள் உரை அமைய வேண்டும். ● தனிநபர் தாக்குதல், ஆதாரமற்ற தகவல்கள், நாகரீகமற்றச் சொற்களுக்கு அனுமதியில்லை. ● படிக்கும் இடத்தில், பணிபுரியும் இடத்தில் தந்துள்ள அடையாள அட்டையை அணிந்திருப்பது அவசியம். ● போட்டியில் கலந்துகொள்பவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளை ஏற்றுக்கொள்பவர்களாக இருப்பது அவசியம். ● நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. ● கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசு வழங்கப்படும்

### விண்ணப்பம்

| | |
|---|---|
| பெயர் | மின்னஞ்சல் |
| முகவரி | மாவட்டம் |
| மாநிலம் | நாடு |
| அஞ்சல் குறியீடு | கைபேசி எண் |
| பாலினம் | பிறந்த தேதி |

**உரக்கப் பேச, உடன்பிறப்புகளே வருக!**